## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.24/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : அம்மனேரி குருநாத ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**17.03.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

5. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 3 ஆகவும் நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 4 ஆகவும் புகைப்படங்கள் நீ.ம.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் நிலத்தை வேலாயுதம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். நிலத்தை எந்த வருடம் வாங்கினேன் என்றால் 2000ல் 5ம் மாதம் வாங்கினேன். நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் 2007ல் அவர் வரப்பை ஒன்றாக சேர்த்துவிட்டார். அதற்கு முன்பு என் நிலத்தை அவரும் அவர் நிலத்தை நானும் உழுது கொண்டிருந்தோம். நிலம் ஆக்கிரமிப்பு செய்த விவரம் எனக்கு 2007ல் தெரியும் என்றால் நான் புல எண்.373ஐ வைத்து கொண்டேன். அவர் 370/10ஐ அவர் வைத்திருந்தார். எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டபோது அவரவர் நிலத்தை அவரவர் வைத்துக்கொள்வோம் என்று

சொல்லிக்கொண்டோம். அப்போது வரப்பை குறைவாக கொடுத்துள்ளார். எங்கள் நிலம் வரப்பு குறைவாக உள்ளது என்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2015ல் தெரியும்.

2. பரிவர்த்தனை செய்யப்பட்ட நிலத்தை வேலாயுதத்திற்கு விற்பனை செய்வதாக சொல்லித்தான் பணம் வாங்கியிருந்தேன் என்றால் ஆமாம். நான் கிரையம் தரமாட்டேன் என்று சொன்னதால்தான் எங்களுக்குள் தகராறு வந்தது என்றால் ஆமாம். வழக்கு நிலத்தை நீதிமன்ற ஆணையர், நில அளவையர் வந்து அளந்தார்களா என்றால் ஆமாம். நிலத்தை அளவீடு செய்யும்போது நானும் ஆக்கிரமிப்பு செய்திருந்தேன், பிரதிவாதியும் ஆக்கிரமிப்பு செய்திருந்தார் என்றால் ஆமாம். அதை இருவரும் அளந்து அவரவர் இடத்தை கல் நட்டினோம் என்றால் ஆமாம். ஆக்கிரமிப்பு செய்த இடத்தை அளந்து அவரவர் இடத்தை அவரவர் வரப்பு போட்டு கொண்டோம் என்றால் அவர் காண்பித்த இடம் வரை வரப்பு போட்டு கொண்டோம். ஆனால் இன்னும் எங்களுக்கு நிலம் வரவேண்டும்.

3. நீதிமன்ற ஆணையர் அளக்கும்போது எனக்கு இன்னும் இரண்டு அடி உள்ளது என்ற விவரத்தை நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. அவர்கள் மாலையில்தான் வந்தார்கள். அளந்து முடிக்கும்போது மணி 7 ஆகிவிட்டது. 3 மணிக்கே வந்து அளந்துவிட்டார்கள் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நிலம் அளவு குறைவாக உள்ளது என்று என் வழக்கறிஞரிடம் தகவல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நீதிமன்ற ஆணையர் தவறாக அளவீடு செய்தார் என்று நான் ஏதேனும் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உண்மையிலேயே நிலம் குறைவாக இருந்திருந்தால் வரப்பு போட்டிருக்க மாட்டோம் என்றாலும் நான் பிரதிவாதிகள் மீது உள்ள முன் பகை காரணமாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அளவு குறைவாக உள்ளது என்பதால் மீண்டும் மறு அளவீடு செய்ய வேண்டும் என்று நான் ஏதேனும் மனு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை.

4. நான் சொல்வதுபோல் உண்மையிலேயே அளவு குறைவாக இருந்திருந்தால் மறு அளவீடுக்கு மனு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும்

நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஏற்கனவே முறையாக அளந்து அவரவர் நிலத்திற்கு வரப்பு போடப்பட்டது என்றாலும் நான் தேவையற்று வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் இல்லை. நான் கால தாமதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)